FUTURE VISION STUDY CENTRE
2nd Floor AVK Maruthi Plaza,Opp, Hotel Lakshmi Prakash, SKS Hospital Road, Salem-4

# TET

# தமிழ் இலக்கணம்

## STUDY MATERIAL

90420 30163
FUTURE VISION STUDY CENTRE
FUTURE VISION STUDY CENTRE
www.futurevisiontnpsc.com

# தமிழ் இலக்கணம்

FUTURE VISION

# INDEX

## (பொருளடக்கம்)


| S. NO | TOPICS | PAGE NO |
|---|---|---|
| 1 | அடிப்படையான தமிழ் இலக்கணமும் மொழித்திறனும் | 04 |
| 2 | எழுத்திலக்கணம் | 10 |
| 3 | சொல்லிலக்கணம் | 38 |
| 4 | பொருள் இலக்கணம் | 148 |
| 5 | யாப்பு இலக்கணம் | 154 |
| 6 | அணி இலக்கணம் | 178 |
| 7 | SCHOOL BOOK CONTENT | 190 |
| 8 | 11TH STANDARD | 191 |
| 9 | 12TH STANDARD | 216 |


FUTURE VISION

# 1. அடிப்படையான தமிழ் இலக்கணமும் மொழித்திறனும்

## 1. அகரமுதலி:

அகரமுதலியில் உயிரெழுத்து பெறும் வரிசை

**உயிரெழுத்து வரிசை:** அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

**மெய்யெழுத்து வரிசை:** க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க் | ங் | ய் |
| ச் | ஞ் | ர் |
| ட் | ண் | ல் |
| த் | ந் | வ் |
| ப் | ம் | ழ் |
| ற் | ன் | ள் |

- பதினெட்டு மெய்யெழுத்துகளும் அகரமுதலி வரிசையில் இவ்வாறு வந்துள்ளன.
- வல்லெழுத்தைத் தொடர்ந்து அதன் இனமான மெல்லெழுத்து வருவது கவனிக்கத்தக்கது.

  அடுத்து, இடையின எழுத்துகள் வருகின்றன.

  “ **ற், ன்**மட்டும் இறுதியில் வருகின்றன.”

அப்படியானால், அகரமுதலியில் அக்காள் என்னும் சொல் முதலில் வருமா ?

அண்ணன் என்னும் சொல் முதலில் வருமா ? மெய்யெழுத்து வரிசையைப் பாருங்கள் அக்காள் என்னும் சொல்தான் முதலில் வரும்.

**அம்மா, அப்பா, அண்ணி, அங்காடி, அன்னம்** என்னும் சொற்களை அகரமுதலி வரிசையில் எழுதுவதானால் அங்காடி, அண்ணி, அப்பா, அம்மா, அன்னம் என்றுதான் எழுத வேண்டும்.

## 2. மாத்திரை

இலக்கணத்தில் மாத்திரை என்பது எழுத்துகளின் ஒலியின் அளவைக் குறிக்கும் சொல். மாத்திரை என்பது சிறிய ஒலியளவு.

கண் சிமிட்டும் நேரம் அல்லது விரல் சொடுக்கும் நேரம் மாத்திரையின் கால அளவாகும்.

தமிழ் எழுத்துகளுக்கான மாத்திரை அளவைத் தெரிந்துகொள்ளுங்கள்.

- **மெய்யெழுத்து – அரை மாத்திரை**
- **உயிரெழுத்து (குறில்) – ஒரு மாத்திரை**
- **உயிரெழுத்து (நெடில்) – இரு மாத்திரை**
- **உயிர்மெய் (குறில்) – ஒரு மாத்திரை**
- **உயிர்மெய் (நெடில்) – இரு மாத்திரை**

இந்த அளவைத் தாண்டும் ஒலியளவை அளபெடை என்கிறோம்

FUTURE VISION

**3. செய்யுள் மொழி**

எவன் கொலோ ?

திருக்குறளில் இடம்பெறும் இச்சொற்கள் தரும் பொருள் என்ன ?

என்ன பயன்கருதியோ ? என்பது பொருள். செய்யுளில் ஓசைக்காகவும் அழுத்தம் தருவதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் – கொல்.

இது பெரும்பாலும் ஐயப்பொருளில் வரும்.

ஒரு பெண்ணைப் பார்த்து, 'மான் கொல் ? மயில் கொல் ?' என்றால், இவள் மானோ மயிலோ எனக் கூறுவதாகப் பொருள். இது செய்யுள் வழக்கு.

**4. அளபெடை**

உப்பு… உப்பு… என்று யாராவது உப்பு விற்கிறார்களா ?

உப்பூஉஉ…. என்று கூவுவார்கள். அல்லது உப்போஒஒஒ…. உப்பு என்பார்கள்.

இதேபோல் மாஅஅம்பழம் என்று கூவி விற்கிறார்கள். இவ்வாறு நீட்டி ஒலிப்பது **அளபெடை.**

உப்பூஉஉ – என்பது உயிர் அளபெடை. ஏனென்றால், உ என்னும் உயிர் எழுத்து நீண்டு ஒலித்தது.

பொய்ய்ய்… என்பது ஒற்றளபெடை. ஏனென்றால், ய் என்னும் மெய் எழுத்து (ஒற்றெழுத்து) நீண்டு ஒலித்தது.

**5. பிழையும் திருத்தமும்**

கீழே காணப்படுபவை பிழையான சொற்றொடர்கள்.

1. சிங்கம் வந்தான்.
2. இராமன் அழுதாள்.
3. பறவைகள் பாடியது.
4. அவன் வந்தேன்.

ஏனெனில், இச்சொற்றொடர்களில் உள்ள வினைச்சொற்கள் பிழையானவை. எப்படி இருந்தால் முறையாக இருக்கும் ?

அ. வந்தது ஆ. அழுதான் இ. பாடின ஈ. வந்தான்

பிழைகள் நேராமல் இருக்க நாம் திணை, பால், எண், இடம் பற்றி அறிய வேண்டும்.

**6. திணை**

உயர்திணை, அஃறிணை எனத் திணை இருவகைப்படும்.

மனிதர் **உயர்திணை** ஆவர்.

மனிதர் அல்லாத உயிருள்ளவையும் உயிரற்றவையும் **அஃறிணை** ஆகும்.

பெயர்ச்சொற்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் எனப் பிரிக்கிறோம்.

வீரன், அம்மா, நடிகன், கண்ணகி – **உயர்திணைப் பெயர்கள்.**

பூ, மரம், பூனை, குருவி –**அஃறிணைப் பெயர்கள்.**

FUTURE VISION

**7. பால்**

பால் என்பது மற்றொருவகைப் பிரிவு. பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் ஐந்து பால்களாகப் பிரிக்கிறோம்.

அவை

- ஆண்பால் – அவன், அண்ணன்
- பெண்பால் – அவள், அரசி
- பலர்பால் – அவர்கள், இளைஞர்கள்
- ஒன்றன்பால் – அது, குதிரை
- பலவின்பால் – அவை, மாடுகள்

ஆண்பால் பெயர்ச்சொல் ஆண்பால் வினை முடிவையே பெறும்.

அவன் வந்தான்.

(பெயர்) (வினை)

அவன் வந்தாள் என்றோ, அவன் வந்தார் என்றோ எழுதுவது பிழையாகும். இதேபோல்தான், பிற பால் சொற்களையும் எழுதுதல் வேண்டும்.

**பெயர் – வினை**

- அவள் – **வந்தாள்**
- அவர்கள்– **வந்தார்கள்**
- அது – **வந்தது**
- அவை – **வந்தன**

**8. எண்**

ஒருமை, பன்மை என எண் இருவகைப்படும்.

ஒன்றனைக் குறிப்பது ஒருமை; ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை.

* பூ – ஒருமை
* பூக்கள் – பன்மை
* மாணவன் – ஒருமை
* மாணவர் – பன்மை

பெயர் ஒருமையில் இருந்தால், வினைமுடிவும் ஒருமையிலேயே இருத்தல் வேண்டும்.

**(எ.கா.) திருடன் பிடிபட்டான்.**

பெயர் பன்மையில் இருந்தால், வினைமுடிவும் பன்மையிலேயே இருத்தல் வேண்டும்.

**(எ.கா.) திருடர் பிடிபட்டனர்.**

FUTURE VISION

**I. ஒருமை – பன்மை**

| பிழை | திருத்தம் |
|---|---|
| அ. காற்று **வீசின;**மரங்கள் **அசைந்தது.** | காற்று **வீசியது;** மரங்கள் **அசைந்தன.** |
| ஆ. தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் **சென்றான்.** | தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் **சென்றார்கள்** |

## 9. இடம்

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்றாகும்.

**நான், அவன்** வீட்டுக்குப் போனேன். **நீ** ஏன் வரவில்லை ?

இச்சொற்றொடரில்,

நான் – தன்மை, நீ – முன்னிலை, அவன் (அவள், அது) – படர்க்கை.

பன்மையில் வரும்போது நாங்கள் – தன்மை.

நீங்கள் – முன்னிலை, அவர்கள், அவை – படர்க்கை.

தன்மை என்பது தன்னைக் குறிப்பது.

முன்னிலை என்பது முன்னால் இருப்பவரைக் குறிப்பது.

படர்க்கை என்பது தன்மை, முன்னிலை அல்லாத மற்றவரைக் குறிப்பது.

ஒவ்வோர் இடமும் அதற்கேற்ப வினைமுடிவைப் பெறுதல் வேண்டும்.

## 10. காலம்

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்காலங்கள் இருப்பது உங்களுக்குத் தெரியும். காலத்தைக் குறிக்கும் உரிய வினைச்சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

‘பார்’ என்னும் வினைச்சொல் காலத்திற்கு ஏற்றபடி பின்வருமாறு மாறுகிறது.

- ♦ பார்த்தேன் ( இறந்தகாலம் )
- ♦ பார்க்கிறேன் ( நிகழ்காலம் )
- ♦ பார்ப்பேன் ( எதிர்காலம் )

**II. காலம்**

| பிழை | திருத்தம் |
|---|---|
| அ. நாளைக்கு நான் ஊருக்குப் போய்ச் **சேர்ந்தேன்.** | நாளைக்கு நான் ஊருக்குப்போய்ச் **சேர்வேன்.** |
| ஆ. நேற்று பால் **பொங்குகிறது.** | நேற்று பால் **பொங்கியது** |

## 1. அடிப்படை

எழுத்து, சொல், சொற்றொடர் என மூன்றும் மொழியின் அடிப்படை உறுப்புகள்.

- ♦ அ – எழுத்து.
- ♦ அன்பு – சொல்.
- ♦ அன்பே தெய்வம் – சொற்றொடர்.

FUTURE VISION

சொல் என்பதனை மொழி, பதம், கிளவி, வார்த்தை எனவும் சொல்வோம். சொற்றொடரை வாக்கியம் எனவும் சொல்வோம்.

**2. எழுத்து**

அ. எல்லா எழுத்துகளுக்கும் அடிப்படையானது ஒலி.

அரசன், வால் எடுத்துச் சண்டைக்குப் போனான் என எழுதுவதும், பேசுவதும் தவறு.

ஒவ்வோர் எழுத்துக்கும் ஓர் ஒலி உண்டு.

ஆ. ஒவ்வோர் எழுத்தும் ஒரு பணியைச் செய்கிறது.

**அ, இ, உ –** சுட்டும் எழுத்துகள் (சுட்டெழுத்துகள்) (உ– பயன்பாட்டில் இல்லை.)

**எ, யா, ஆ, ஓ, ஏ –** ஆகியவை வினா எழுப்பும் எழுத்துகள். (வினா எழுத்துகள்)

**ஏ –** என்பது சொல்லின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப்பொருளைத் தரும்.

இ. எழுத்துகளுக்கு இடையே நட்பு உண்டு. அதனைப் புரிந்துகொண்டால் பெரும்பாலான பிழைகளை நீக்கலாம்.மெல்லின எழுத்தும், அதன் நட்பு எழுத்தான வல்லின எழுத்தும் அடுத்தடுத்து வருவது இயல்பு.

**ங்க ; ஞ்ச ; ண்ட ; ந்த ; ம்ப ; ன்ற** இந்த இயல்பைப் புரிந்துகொண்டவர்கள், **உண்டான்** எனவும், **தின்றான்** எனவும் முறையாக எழுதுகிறார்கள். புரியாதவர்கள் உண்டான் **'திண்றான்'**எனவும் பிழையாகவே எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள்.

ஈ. பிழை நேர்வது எப்போது ?

**I. ஒற்றுப்பிழை**

பாடலை பிரித்து படி. (பிழை).

பாடலைப் பிரித்துப் படி. (திருத்தம்)

**II. குறில் நெடில்பிழை**

அ) **தண்ணிர்** குடித்தான். (தண்ணீர்)

ஆ) கடைக்குப் போய்**வெட்டி** சட்டை வாங்கினான். (வேட்டி)

இ) என்ன **கோடுமை** இது ! (கொடுமை)

**III. துணையெழுத்துப் பிழை**

அ) அப்பாவிக்குப் **பென்னும் பெருளும்** கிடைத்தது. (பொன்னும் பொருளும்)

ஆ) **சோவல்** சண்டை பார்த்தேன். (சேவல்)

**IV. மயங்கொலிப் பிழை**

பாதையில் **கள்ளும் முல்லும்** கிடந்தன. ( கல்லும் முள்ளும்)

**தமிழில் உள்ள முதல் எழுத்துகள் மொத்தம் முப்பது.**

உயிர் எழுத்துகள் **பன்னிரண்டு,**

மெய் எழுத்துகள் **பதினெட்டு** ஆக மொத்தம் முப்பது.

FUTURE VISION

**(எ.கா.)** அண்ணா.

அ – உயிரெழுத்து

ண் – மெய்யெழுத்து

ணா – உயிரும் மெய்யும் சேர்ந்து வந்த உயிர்மெய் எழுத்து.

உயிரும் மெய்யும் சேர்ந்து 216 (இருநூற்றுப் பதினாறு) உயிர்மெய் எழுத்துகளை உருவாக்குகின்றன. ஆனால், அவை அனைத்தையும் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவது இல்லை.

எடுத்துக்காட்டாக, **கி, சி, பி, டி, தி, மி** – போன்ற உயிர்மெய் எழுத்துகள் அன்றாடப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுகின்றன. **ஙி, ஞி, ஙௌ, ஞௌ, ணௌ** போன்றவை அவ்வாறுபயன்படுவது இல்லை.

| |
|---|
| அடிப்படையான தமிழ் எழுத்துகள் முப்பது மட்டுமே. |

❖ குறில் நெடில் உண்டாவது எப்படி ?

அ, இ, உ, எ, ஒ – ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள்.

இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, **உயிர்மெய்க்குறில்** எழுத்துகள் உண்டாகின்றன.

**க**டல், **கி**ளி, **கு**ரங்கு, **செ**ன்னை, **சொ**ல்

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – ஏழும் நெடில் எழுத்துகள்.

இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, **உயிர்மெய்நெடில் எழுத்துகள்** உண்டாகின்றன.

**கா**ளை, **கீ**ற்று, **கூ**டல், **கே**ள்வி, **கை**, **கோ**வில், **கௌ**தாரி

குறில் நெடில் வேறுபாடு அறிந்து எழுதுக.

- பல் தேய்த்தேன்.
- பால் குடித்தேன்.
- பல், பால் இடம் மாறினால் குழப்பம் வரும்.

**அவன், அவள், அவர்,**

**இவன், இவள், இவர்,**

**அது, இது, அவை, இவை** என்னும் சொற்கள், குறிப்பிட்ட மனிதரையோ பொருளையோ சுட்டிக்காட்ட உதவுகின்றன.

இப்படிச் சுட்டிச்சொல்ல உதவும் எழுத்துகள் இரண்டு. அவை **அ, இ** இவற்றைச் **சுட்டெழுத்துகள்** என்கிறோம்.

பழங்காலத்தில் '**உ**' என்பதும் சுட்டெழுத்துதான். '**உ**' எழுத்து, பல பணிகளைச் செய்தது.

- ❖ **உதுக்காண்**என்றால், 'சற்றுத் தொலைவில் பார்' என்பது பொருள்.
- ❖ **உப்பக்கம்** என்றால், 'முதுகுப்பக்கம்' என்பது பொருள்.
- ❖ **உம்பர்** என்றால், 'மேலே' என்பது பொருள்.

இப்பொழுது, சுட்டிச்சொல்ல நாம் '**உ**'எழுத்தைப் பயன்படுத்துவது இல்லை.



FUTURE VISION

**தமிழிலக்கணம் ஐவகைப்படும்.**

1. எழுத்திலக்கணம்
2. சொல்லிலக்கணம்
3. பொருளிலக்கணம்
4. யாப்பிலக்கணம்
5. அணியிலக்கணம்

## 1. எழுத்திலக்கணம்

### எழுத்து, சொல்

மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணம்.
மொழியின் சிறப்புகளை அறியவும் இலக்கணம் துணை செய்யும்.

### எழுத்து

**எழுத்து**

ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரிவடிவமாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

**உயிர் எழுத்துகள்**

உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன. வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் அ முதல் ஔ வரையுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பிறக்கின்றன.

**ஒலித்துப் பார்த்து உணர்வோம்!**

அ,இ,உ,எ,ஒ – ஆகிய ஐந்தும் குறுகி ஒலிக்கின்றன.

ஆ,ஈ,ஊ,ஐ,ஓ,ஔ – ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன.

- குறுகி ஒலிக்கும் அ,இ,உ,எ,ஒ ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள்.
- நீண்டு ஒலிக்கும் ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ ஆகிய ஏழும் நெடில் எழுத்துகள்.
  ஒவ்வோரு எழுத்தையும் உச்சரிப்பதற்குக் கால அளவு உண்டு.
  எழுத்தை உச்சரிக்க எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொண்டே குறில், நெடில் வகைப்படுத்துகிறோம்.

**மாத்திரை**

மாத்திரை என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

- குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு -1 மாத்திரை
- நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 2 மாத்திரை

FUTURE VISION

**மெய்யெழுத்துகள்**

மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும் மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. க்,ங்,ச்,ஞ்,ட்,ண்,த்,ந்,ப்,ம்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ற்,ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும்.

மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு – அரை மாத்திரை

**ஒலித்துப் பார்த்து உணர்வோம்!**

- க்,ச்,ட்,த்,ப்,ற் - ஆகிய ஆறும் வன்மையாக ஒலிக்கின்றன.
- ங்,ஞ்,ண்,ந்,ம்,ன் - ஆகிய ஆறும் மென்மையாக ஒலிக்கின்றன.
- ய்,ர்,ல்,வ்,ழ்,ள் - ஆகிய ஆறும் வன்மையாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கின்றன.

## எழுத்துகளின் வகை

முதலெழுத்து, சார்பெழுத்து என எழுத்துகள் இருவகைப்படும்.

## முதலெழுத்துகள்

- **அ** முதல் **ஔ** வரை உள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், **க்**முதல் **ன்**வரை உள்ள மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய **முப்பது** எழுத்துகளும் முதலெழுத்துகளாகும். இவை சார்பெழுத்துகள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் இருப்பதனால் **முதலெழுத்துகள்** எனப்பட்டன.

## சார்பெழுத்துகள்

- முதலெழுத்துகளைச் சார்ந்து இயங்கும் எழுத்துகள் **சார்பெழுத்துகள்** எனப்படும். இவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் **பத்து** வகைப்படும்.
- நம் தமிழ்மொழியிலும் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனித்து இயங்கி முதன்மைபெற்று விளங்குவதால், அவற்றை **முதலெழுத்துகள்**என்கிறோம்.

முதலெழுத்துகளைச் சார்ந்துவரும் எழுத்துகளைச் **சார்பெழுத்துகள்** என்கிறோம்

**உயிர்மெய்:**

மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும்.

மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்தால் உயிர்மெய்க் குறில் தோன்றுகிறது. மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்தால் உயிர்மெய் நெடில் தோன்றுகிறது. ஆகவே உயிர்மெய் எழுத்துகளையும் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இருவகைப்படுத்தலாம்.

- ✓ உயிர்மெய் எழுத்தின் ஒலிவடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.
- ✓ வரிவடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும். ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்திருக்கும்.
- ✓ முதல் எழுத்துகளைச் சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்து வகையுள் அடங்கும்.
- ✓ **(க் + அ = க ; க் + ஆ = கா ; க் + இ = கி)**



FUTURE VISION

**ஆய்த எழுத்து:**

தமிழ் மொழியில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் தவிர தனி எழுத்து ஒன்றும் உள்ளது. அது ∴ என்னும் ஆய்த எழுத்தாகும்.

ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு அரை மாத்திரை

- மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்றது.
- முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, அ∴கேனம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.
- நுட்பமான ஒலிப்புமுறையை உடையது.
- தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
- தனித்து இயங்காது.
- முதல் எழுத்துகளாகிய உயிரையும், மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்து ஆகும்.

➢ இஃது உயிரோடும் மெய்யோடும் சேராமல் தனித்தே இருப்பதால், **தனிநிலை** எனவும் கூறுவர்.

➢ போர் வீரர்கள் பயன்படுத்தும் தற்காப்பு ஆயுதத்தில் (கேடயம்) காணப்படும் மூன்று குமிழ்ப்புள்ளிகள் போன்று இருத்தலால் **ஆய்தம் எனவும்**கூறுவர்.

➢ ஆய்த எழுத்து இடம்பெறும் சொற்கள் இரண்டு :– 1. எஃகு 2. அஃதிலார்.

## 3. அளபெடை

➢ செய்யுளில் ஓசை குறையும்போது, ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும்.

➢ அவ்வாறு நீண்டு ஒலிப்பதனை **அளபெடை**என்கிறோம்.

அளபு = மாத்திரை. எடை = எடுத்தல் என்பது பொருள்.

எழுத்தினது மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல்.

அளபெடை இருவகைப்படும். முதலாவது **உயிரளபெடை,** இரண்டாவது **ஒற்றளபெடை.**

## 1. உயிரளபெடை

➢ உயிரளபெடை என்றால் செய்யுளில் ஓசை குறையும்போது, அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். இஃது, உயிரளபெடை எனப்படும். அவ்வாறு அளபெடுக்கும்போது, அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் குறியீடாக அதன்பக்கத்தில் வரும். ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இன எழுத்தாக வரும். இவ்வுயிரளபெடை மூவகைப்படும்.

1. செய்யுளிசை அளபெடை
2. இன்னிசை அளபெடை
3. சொல்லிசை அளபெடை.

➢ செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடையைச் **செய்யுளிசை அளபெடை** என்பர்.

➢ ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுத்தலை **இன்னிசை அளபெடை** என்பர்.

- இவ்விரண்டும் அல்லாமல் பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை, **சொல்லிசை அளபெடை**யாகும்.

## 1. செய்யுளிசை அளபெடை:

- செய்யுளில் ஓசை குறையும் இடத்தில், அந்த ஓசையை நிறைவுசெய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற உயிர்நெடில் எழுத்துகள் ஏழும், உரிய மாத்திரையிலிருந்து மிக்கு ஒலிக்கும். இதனையே **செய்யுளிசை அளபெடை**எனக் கூறுவர்.

கெட**ாஅ**வழிவந்த கேண்மையார் கேண்மை
விட**ாஅ**ர் விழையும் உலகு. – குறள், 809

- இக்குறளைப் படித்துப் பாருங்கள். கெ**டா**என்பது கெ**டாஅ**என இறுதியிலும், வி**டார்** என்பது வி**டாஅ**ர் என இடையிலும் அளபெடுத்து வந்துள்ளது.
- எனவே, இது செய்யுளிசை அளபெடை ஆகும்.
- இதற்கு **இசைநிறை அளபெடை**என்னும் வேறுபெயரும் உண்டு.

**எ.கா:**

ஓஒதல் வேண்டும் - மொழி முதல்
உறாஅர்க்கு உறுநோய் - மொழியிடை
நல்ல படாஅ பறை – மொழியிறுதி

## 2. இன்னிசை அளபெடை:

கெடுப்ப**தூஉம்** கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்ப**தூஉம்** எல்லாம் மழை. – குறள், 15

கெடுப்பதும், எடுப்பதும் என ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காக **து** என்னும் குறில் **தூ** என நெடிலாக மாறி அளபெடுப்பது **இன்னிசை அளபெடை** ஆகும்.

## 3. சொல்லிசை அளபெடை

- செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்.

குடி**தழீஇ**க் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடி**தழீஇ** நிற்கும் உலகு. – குறள், 544

இக்குறட்பாவில் **தழீஇ** என்னும் சொல் அளபெடுத்து வந்துள்ளது.

- **தழீ–** தழுவுதல் என்னும் தொழிற்பெயர்ச் சொல், **தழீஇ** ( தழுவி ) என வினையெச்சச் சொல்லாகப் பொருள் தருவதற்கு அளபெடுத்ததனால் இது **சொல்லிசை அளபெடை** ஆயிற்று.

**எ.கா:**

உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

FUTURE VISION

நசை – விருப்பம்; விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. பெயர்ச்சொல், வினை அடையாக மாறியது.

2. **ஒற்றளபெடை**

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும், ∴ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.

எங்ங் கிறைவன்

எ∴∴கிலங்கிய கையராய் இன்னுயிர்

## 4. ஒற்றளபெடை:

- செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும். இஃது **ஒற்றளபெடை** எனப்படும்.

**எங்ங்**கி றைவனுள னென்பாய்

வெஃஃகுவார்க் கில்லை வீடு.

- இத்தொடர்களில் உள்ள **ங்**மற்றும் **ஃ**ஆகிய எழுத்துகள் இருமுறை வந்துள்ளன.
- இவ்வாறு **ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்** ஆகிய **பத்து மெய்யும்,ஃ**ஒன்றும் ஆகப் **பதினோர் எழுத்துகளும்** ஒரு குறிலை **அடுத்தும் இருகுறில்களை அடுத்தும்** செய்யுளில் இனிய ஓசை வேண்டி அளபெடுக்கும்.
- இவ்வாறு அளபெடுப்பதற்கு **ஒற்றளபெடை** என்பது பெயர்.

1. செய்யுளிசை அளபெடை (இசைநிறை அளபெடை) – செய்யுளின் ஓசையை நிறைவு செய்ய ஈரசை கொண்ட சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) உ**ழா**அர், பட**ா**அர்.
2. இன்னிசை அளபெடை – இனிய இசைக்காகக் குறில் நெடிலாக அளபெடுத்து, மூவசைச் சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) கெடுப்ப**தூஉ**ம், எடுப்ப**தூஉ**ம்.
3. சொல்லிசை அளபெடை – பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும். **இ** என்னும் எழுத்தில் முடிவு பெற்றிருக்கும். (எ.கா.) ந**சைஇ**, நி**றீஇ.**
4. ஒற்றளபெடை – வல்லினத்து **க், ச், ட், த், ப், ற்** என்னும் ஆறும், இடையினத்தில் **ர்,** ழ் என்னும் இரண்டும் ஆக இந்த எட்டு மெய்யெழுத்துகள் தவிரப் பிற மெய்யெழுத்துகள் அளபெடுக்கும்.

| **எழுத்துவகை** | | **மாத்திரை** |
|---|---|---|
| ✓ உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் | – | ஒன்று |
| ✓ உயிர்நெடில், உயிர்மெய்நெடில் | – | இரண்டு |
| ✓ மெய், ஆய்தம் | – | அரை |
| ✓ உயிரளபெடை | – | மூன்று |
| ✓ ஒற்றளபெடை | – | ஒன்று. |



FUTURE VISION

# MATERIALS & TEST BATCH தேவைக்கு

**TNPSC: GR – I & II (P), GR – IV,**

**(TAMIL & ENGLISH MEDIUM),**

**PG: TRB – TAMIL, ENGLISH,**

**MATHS & COMPUTER SCIENCE**

**TET: P1 & P2**

## CONTACT: 90420 30163

**************************************

## FUTURE VISION STUDY CENTRE

**2ND FLOOR, AVK MARUTHI PLAZA,**

**OPP. HOTEL LAKSHMI PRAKASH,**

**SKS HOSPITAL ROAD,**

**SALEM – 636 004**